அல்லாஹ்வின் கட்டளை

كُلُوۡا مِنۡ طَيِّبٰتِ مَا رَزَقۡنٰكُمۡ

நாம் உங்களுக்கு வழங்கிய தூய உணவுகளிலிருந்து உண்ணுங்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 58)

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 7

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

28 ஜமாதுல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி   15 தப்லீக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

15 பிப்ரவரி 2018


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இவை மூன்று அடிப்படை விஷயங்களாகும். இவற்றை நமது ஜமாஅத் பாதுகாக்க வேண்டும். மேலும் இவற்றில் உயர்விலும் உயர்வான முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நமது எல்லா அறிவுரைகளின் சுருக்கமும் மூன்று விஷயங்களாகும். முதலாவது, அல்லாஹ்விற்குரிய உரிமைகளை நினைவு கூர்ந்து அவனை வணங்குவதிலும் அவனுக்கு கட்டுப்படுவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும். அவனது மகத்துவத்தை உள்ளத்தில் அமர்த்த வேண்டும். எல்லாவற்றையும் விட அதிகமாக அவன் மீது அன்பு கொள்ள வேண்டும். அவனுக்கு அஞ்சியவாறு மன இச்சைகளை விட்டு விட வேண்டும். அவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்றும் அறிந்து கொள்ள வேண்டும். அவனுக்காக தூய வாழ்க்கையை வாழ வேண்டும். எந்த ஒரு மனிதனுக்கும் அல்லது ஏனைய படைப்பினங்களுக்கும் அவனது தகுதியை வழங்கக் கூடாது. உண்மையில் எல்லா ஆன்மாக்களையும் உடல்களையும் உருவாக்குபவன் அவன்தான் என்றும் அவன்தான் எஜமானன் என்றும் உறுதி கொள்ள வேண்டும். இரண்டாவது விஷயம், முழு மனித இனத்துடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் தன்னால் இயன்றவரை ஒவ்வொருவருக்கும் நன்மை செய்வதும் குறைந்தபட்சம் நன்மைக்கான எண்ணம் கொள்வதுமாகும். மூன்றாவது விஷயம், எந்த அரசின் நிழலின் கீழ் இறைவன் நன்மை வைத்துள்ளானோ அதாவது ஆங்கிலேய அரசாங்கமானது நமது கண்ணியம், உயிர், பொருள் ஆகியவற்றின் பாதுகாவலனாக இருக்கின்றது. அதற்கு உண்மையான முறையில் நன்மையை விரும்புவதுடன் அதனை கவலையில் ஆழ்த்துகின்ற அத்தகைய அமைதிக்கு எதிரான விஷயங்களிலிருந்து தொலைவில் இருக்க வேண்டும். இவை மூன்று அடிப்டை விஷயங்களாகும். இவற்றை நமது ஜமாஅத் பாதுகாக்க வேண்டும். மேலும் இவற்றில் உயர்விலும் உயர்வான முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

(கிதாபுல் பரிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 14)

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

### முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.

✦ 44 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ 20,048 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,300 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ 32 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ 20 முதல் 22 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسۡمَعُوۡا صَوۡتَ السَّمَآءِ جَآءَ الۡمَسِیۡحُ جَآءَ الۡمَسِیۡحُ *MTA* இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டுடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி *MTA* -வில் ஒளிபரப்பப்பட்டது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

சுருக்கமாக, தாயி∴ப் நகரில் இருந்த நாட்கள் நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களுக்கு மிகவும் கடினமான நாட்களாக இருந்தன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒருமுறை நபி கரீம் (ஸல்) அவர்களிடம் "உஹது போரின் நாட்களை விட அதிகமான கடினமான நாட்கள் கூட உங்கள் மீது வந்துள்ளதா?" என்று கேட்டதற்கு (அதாவது உஹது போர் நடந்த நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் பற்கள் உடைந்தன. அன்னாரது முகத்திலும் காயம் ஏற்பட்டது) பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஆயிஷாவே! நான் உனது சமுதாயத்திடமிருந்து பெரும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டேன். ஆனால், எல்லாவற்றையும் விட கடினமான துன்பத்தை தாயி∴ப் பயணத்தின்போது எனக்கு எதிர்கொள்ள வேண்டியது வந்தது. அப்போது நான், கடுமையான துன்பம் எனக்கு ஏற்பட்டிருக்கும் நிலையில், தலை குனிந்த நிலையில் சென்று கொண்டிருந்தேன். அப்போது நான் பார்த்தது என்னவென்றால், ஒரு மேகம் என்னை தனது நிழலில் எடுத்துக் கொண்டது. அப்போது மலைகளின் மலக்கு என்னை குரல் கொடுத்து அழைத்தார். எனக்கு ஸலாம் கூறி விட்டு நான் மலைகளின் மலக்கு ஆவேன். என்னை உங்களது இறைவன் உங்களிடம் அனுப்பி

*(தொடர்ச்சி 8-வது பக்கம்...)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலுவான தூய்மைப்படுத்துகின்ற ஆற்றல் தொடர்பாக ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆன்மாவுக்கு எழுச்சியூட்டும் வகையில் எடுத்துக் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலின் மூலமாக சஹாபாக்களிடம் வழக்கத்திற்கு மாற்றமான மாற்றங்கள் உருவாகின. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் அறியாமையிலும், சீர்குலைவிலும், அசுத்தத்திலும் மூழ்கியிருந்த மனிதர்களை கல்வி கற்ற மனிதர்களாக ஆக்கினார்கள். பிறகு அவர்களை இறைவனுடன் ஒன்றிவிட்ட மனிதர்களாக ஆக்கினார்கள்.

**பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்களின் தூய்மையான வாழ்க்கை தொடர்பான ஈமானுக்கு எழுச்சியூட்டக் கூடிய சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் ஜமாஅத் சகோதரர்களுக்கு அவர்கள் சஹாபாக்களின் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்குமாறு போதனை செய்தார்கள்.**

மதிப்பிற்குரிய சவுத்ரி நாஸிர் அஹ்மது சாஹிப் (யூ.கே. -ன் துணை அமீர் மற்றும் தலைமையக சொத்துத் துறையின் பொறுப்பாளர்) அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய அமத்துல் மஜீது அஹ்மது சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமாவின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**12 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **12 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றல் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது மார்க்கம் என்னவென்றால் வேறெந்த நபிக்கும் கிடைத்திராத தூய்மைப்படுத்தும் ஆற்றலை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஈர்க்கும் ஆற்றல் மிக வலுவானதாக இருந்தது என்பதே இஸ்லாத்தின் வெற்றியின் இரகசியமாகும். பிறகு அன்னாரது பேச்சுகளில் எப்படிப்பட்ட தாக்கம் இருந்தது என்றால் கேட்பவர்கள் ஈர்க்கப்பட்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''எவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஈர்த்தார்களோ அவர்களை தூய்மை ஆக்கினார்கள்.''

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களிடம் எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தினார்கள் என்பது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''சஹாபாக்களின் நிலைமையைப் பார்த்தால் அவர்களில் பொய் பேசுபவர் எவரும் தென்படுவதில்லை. ஆனால் அரபு நாட்டின் ஆரம்ப நிலையைப் பார்த்தால் அவர்கள் மடமையில் இருந்ததைப் பார்க்க முடியும். சிலை வணக்கத்தில் அவர்கள் மூழ்கி இருந்தனர். அனாதைகளின் செல்வத்தை விழுங்கியும், எல்லா வகையான தீமையிலும் துணிந்தவர்களாகவும் அசுத்தமானவர்களாகவும் அவர்கள் இருந்தனர். கொள்ளையர்களைப் போன்று வாழ்ந்து வந்தனர். சுருக்கமாக, தலை முதல் பாதம் வரை அசுத்தத்தில் அவர்கள் மூழ்கிக் கிடந்தனர்.''

ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களிடம் எப்படிப்பட்ட புரட்சியை ஏற்படுத்தினார்கள் என்றால் அதைப்போன்ற உதாரணம் வேறு சமுதாயங்களில் காணக் கிடைப்பதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த அற்புதம் எவ்வளவு பெரியது என்றால், உலகின் கண் திறப்பதற்கு இதுவே போதுமானதாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''ஒரு மனிதரை சீர்படுத்துவது என்பது கஷ்டமானதாகும். ஆனால் இங்கு ஒரு சமுதாயம் உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மையில் எப்படிப்பட்ட முன்னுதாரணத்தை வெளிப்படுத்தினார்கள் என்றால், உண்மைக்காக ஆடுகளைப் போன்று அறுக்கப்பட்டனர். உண்மை என்னவென்றால், அவர்கள் இப்பூமியின் மனிதர்களாக இருக்கவில்லை. மாறாக, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனை, நேர்வழி மற்றும் தாக்கத்திற்குரிய அறிவுரைகள் அவர்களை விண்ணவர்களாக ஆக்கியது. பரிசுத்த பண்புகள் அவர்களிடம் உருவாயின.....'' இஸ்லாத்தின் இந்த முன்மாதிரியைத்தான் நாம் உலகின் முன்னால் எடுத்து வைக்கின்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இந்த சீர்திருத்தத்தின் காரணமாகத்தான் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களின் பெயரை முஹம்மது என முன்னறிவிப்பாகக் கூறினான். இதனால் அன்னார் உலகில் புகழப்பட்டார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பூமியை அமைதி, சமாதானம், உயர் நன்னடத்தை மற்றும் நல்லொழுக்கத்தால் நிரப்பினார்கள்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 54-55; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இன்றும் நாம் பார்க்கின்றோம். நீதியின் கண் கொண்டு பார்ப்பவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் மடமையான, அசுத்தத்தில் மூழ்கி இருந்த மனிதர்களை கல்வி கற்ற மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு இறைவனை பிரதிபலிக்கும் மனிதர்களாக மாற்றினார்கள் என்பதை ஏற்காமல் இருக்கவே முடியாது. சில வருடங்களுக்கு முன் ஒரு யூத ஆராய்ச்சியாளர் என்னிடம் கூறினார். யூதர்களுக்கு மஸ்ஜித் அக்ஸா செல்வதற்கான அனுமதி இல்லையென்றாலும் நான் அங்கு சென்று அனைத்தையும் பார்த்து வந்துள்ளேன். அங்கு பார்த்ததை அவர் கூறியது மிகவும் விரிவானதாகும்.

எவ்வாறிருப்பினும், அவர் கூறினார்: அங்கு (பள்ளியை) கட்டக்கூடிய கண்காணிப்பாளருக்கு நான் முஸ்லிம் இல்லை என்று என் மீது சந்தேகம் ஏற்பட்டது. இவர் கூறுகிறார்: அவ்வப்போது நான் ஒரு முஸ்லிம் என்பதைப் போல் ஏதேனும் ஒன்றை கூறி வந்தேன். நான் முழுவதுமாக பள்ளியை பார்த்து விட்டபோது அங்குள்ள கண்காணிப்பாளர் என்னிடம், நீங்கள் கலிமா கூட கூறி விட்டீர்கள் தான். இருந்தாலும் எனக்கு நீங்கள் முஸ்லிமா என்கின்ற சந்தேகம் உள்ளது என்றார். எனக்கு நீங்கள் முஸ்லிம் என்ற திருப்தி இல்லை. இப்போது நீங்களோ பார்த்து விட்டீர்கள். இப்போதாவது எனக்கு நீங்கள் உண்மையைக் கூறுங்கள் என்றார். நான் அவரிடம் கூறினேன். நீங்கள் சரியாகச் சொன்னீர்கள். நான் முஸ்லிம் இல்லை. நான் ஒரு யூதர் ஆவேன். ஆனால் லாயிலாஹ இல்லல்லாஹ் மீது நான் நம்பிக்கை கொள்கிறேன். அதாவது அல்லாஹ்வை தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. பிறகு முஹம்மது ரஸூலுல்லாஹ் என்று கூறியதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால் அரபு நாட்டின் வரலாற்றை அறிந்துள்ளேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாதத்திற்கு முன் அரபு நாட்டின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதை நான் நன்கறிவேன். அப்படிப்பட்ட நிலைமையை ஒரு நபியால் மட்டுமே சீர்திருத்த முடியும். உலகவாதி தலைவர்கள் அந்நிலையை மாற்ற இயலாது. எனவே நான் முஹம்மது (ஸல்) அவர்களின் மீது

நான் நம்பிக்கை வைத்தாலும், நம்பிக்கை கொள்ளா விட்டாலும் நான் அவர்களை இறைவன் புறமிருந்து வந்த நபியாகவே கருதுகிறேன் என்றேன். எவ்வாறிருப்பினும், உலகவாதியாக இருந்தும் கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய அந்த மாபெரும் புரட்சியை ஏற்றுக் கொண்டார்.

ஆக, இன்னும் எவரேனும் நீதியோடு பார்த்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலால் சஹாபாக்களிடம் ஏற்பட்ட அசாதாரணமான மாற்றத்தைப் பார்த்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் ஆவார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவே முடியாது.

சஹாபாக்கள் தொடர்பாகவும், அவர்களின் அசாதாரணமான அந்தஸ்து தொடர்பாகவும், அவர்களிடம் ஏற்பட்ட அசாதாரணமான மாற்றங்கள் தொடர்பாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: சஹாபாக்களின் உதாரணத்தைப் பாருங்கள். உண்மையில் சஹாபாக்களின் முன்மாதிரிகள் அனைத்து நபிமார்களின் முன்மாதியாகும். இறைவனுக்கு செயலே விருப்பமானதாகும். அவர்கள் ஆடுகளைப் போன்று தங்களது உயிர்களைத் துறந்தனர். அவர்களின் உதாரணம், ஹஸ்ரத் ஆதம் (ஸல்) அவர்கள் முதல் தொடர்ந்து வரும் நபித்துவத்தைப் போன்றதாகும். அதாவது, நபித்துவம் தொடர்பான எண்ணம் மற்றும் வடிவம் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் காலம் முதல் தொடர்ந்து வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஆனால் அது பற்றி புரிய முடியாமல் இருந்தது. ஆனால் சஹாபாக்கள் அதை பிரகாசமாக்கிக் காட்டி விட்டார்கள். உண்மை மற்றும் நன்றியுணர்வு என்று இதைத்தான் கூறுவர் என எடுத்துரைத்து விட்டார்கள்.

பிறகு அவர்கள் கூறினார்கள்: அவர்கள் கழித்து வந்த சொகுசற்ற வாழ்க்கையின் உதாரணமும் வேறெங்கும் காணக் கிடைப்பதில்லை. சஹாபாக்களின் கூட்டம் வியத்தகு, மதிப்பளிக்கத்தக்க பின்பற்றத்தக்க கூட்டமாக இருந்தது. அவர்களின் உள்ளங்கள் நிச்சயமாக உறுதியினால் நிரம்பி இருந்தன.

அன்னார் கூறினார்கள்: நிச்சய உறுதி ஏற்பட்டால் ஆரம்பத்தில் செல்வத்தை தியாகம் செய்யத் தோன்றும். பிறகு அது அதிகரிக்கும் போது அந்த நிச்சய உறுதியை உடையவர் இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்வதற்கும் தயாராகி விடுகிறார். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 42; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு சஹாபாக்களின் சிறப்பம்சத்தை எடுத்துரைத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللهِ அதாவது, அவர்களை எவ்வித வியாபாரமும் கொடுக்கல் வாங்கலும் அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்து கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை. (24:38)

இதை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: இந்த ஒரு வசனம் மட்டுமே சஹாபாக்களுக்கு ஆதரவாக போதுமானதாகும். அவர்கள் பெரும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தினர். ஆங்கிலேயர்களும் கூட இதை ஏற்றுக் கொள்கின்றனர். அதாவது இதுபோன்ற முன்னுதாரணங்கள் கிடைப்பது கடினமானதாகும். காட்டுவாசிகளாக இருந்த அவர்களிடம் இந்த அளவு வீரமும் தைரியமும் இருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 304; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களை எந்த வியாபாரமும் கொடுக்கல் வாங்கலும் இறைவனை நினைவு கூர்வதை விட்டும் தடுக்க முடியாது. அதாவது இறைவன் மீதுள்ள அன்பில் எந்த அளவுக்கு முழுமை இருந்தது என்றால் உலக வேலைகள் எவ்வளவு அதிகமானமாக இருந்தாலும் அவர்களுடைய நிலையில் அது தடையை ஏற்படுத்த இயலாது. (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 1 பக்கம் 617 அடிக்குறிப்பு)

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللهِ என்று எவர்களைப் பற்றி அல்லாஹ் கூறியுள்ளானோ அவர்களே முழுமையான அடியார்கள் ஆவர். உள்ளம் இறைவனோடு உண்மையான தொடர்பை ஏற்படுத்தி விடும்போது பிறகு அவனை விட்டுப் பிரிவதே இல்லை. அந்த நிலையை இவ்வாறு புரிந்து கொள்ளலாம். அதாவது ஒருவருடைய குழந்தை நோய்வாய்ப்பட்டு விட்டால் அவர் எங்கு சென்றாலும், எந்தப் பணியில் மூழ்கி இருந்தாலும் அவருடைய உள்ளமும், சிந்தனையும் அந்த குழந்தையின் மீதே இருக்கும். அதுபோன்று எவர்கள் இறைவனோடு உண்மையான தொடர்பு மற்றும் அன்பை ஏற்படுத்துகிறார்களோ அவர்கள் எந்நிலையிலும் இறைவனை மறப்பதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 20-21; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, சஹாபாக்கள் இறைவனோடு எப்படிப்பட்ட உண்மையான தொடர்பு மற்றும் அன்பு கொண்டிருந்தார்கள் என்றால், அவர்கள் இறைவனை விட்டு கவனமற்றவர்களாக இருப்பார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை அல்லது ஏதேனும் தியாகத்திற்கு அவர்கள் தயங்குவார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. சஹாபாக்களின் ஏராளமான உதாரணங்கள் உள்ளன. ஹஸ்ரத் ஹபாப் பின் அர்த் தொடர்பாக வருகிறது. அவர்களுடைய மரணத் தருவாய் நெருங்கியபோது அவர்களுக்கு இறையச்சம் எந்த அளவுக்கு இருந்தது என்றால், அவர்கள் தனது கஃபனைப் பார்ப்பதற்காக கொண்டு வருமாறு கூறினார்கள். பார்த்தபோது அது ஒரு சிறந்த துணியினால் ஆன கஃபனாக இருந்தது. தனது நண்பர்களிடம் இவ்வளவு சிறந்த துணியையா கஃபனாக எனக்கு போடப் போகிறீர்கள்? எனக் கேட்டவாறு அழ ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு கஃபனாக ஒரு போர்வைதான் கிடைத்தது. அதுவும் எவ்வளவு சிறியதாக இருந்ததென்றால் காலை மறைத்தால் தலை தெரிந்தது. தலையை மறைத்தால் கால் தெரிந்தது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி கால்கள் புற்களால் மறைக்கப்பட்டன. பிறகு மிகவும் அச்சத்துடன் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் நான் ஒரு தினாருக்கோ அல்லது திர்ஹமுக்கோ சொந்தக்காரனாக இருக்க –வில்லை. ஆனால் இன்று நபி (ஸல்) அவர்களின் அருளின் காரணமாக அல்லாஹ்வின் காரணமாக அந்த தியாகங்களை இறைவன ஏற்றுக் கொண்டதன் காரணமாக அல்லாஹ் எனக்கு எவ்வளவு செல்வத்தை வழங்கியுள்ளான் என்றால் வீட்டில் மூலையில் கிடக்கும் பெட்டியில் கூட 40 ஆயிரம் திர்ஹம்கள் உள்ளன.

அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எந்த அளவுக்கு வழங்கினான் என்றால் அல்லாஹ் எனது நற்செயல்களுக்கான நற்கூலியை இவ்வுலகிலேயே வழங்கி விட்டானோ என நான் அஞ்சினேன். மறுமையின் நற்கூலியிலிருந்து நான் விலக்கி வைக்கப்பட்டு விடுவேனோ என்று பயமாக உள்ளது என்றார். இவர்கள் இறுதியாக நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் சஹாபாக்கள் இவர்களை நலம் விசாரிப்பதற்காக சென்றிருந்த போது நீங்களும் பெரும் பெரும் சஹாபாக்களைச் சந்திக்கப் போகிறீர்கள் என்று அவர்களுக்கு ஆறுதல் கூறியபோது அன்னார் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நான் மரண பயத்தால் அழுகிறேன் என்று எண்ண வேண்டாம். மாறாக நீங்கள் அந்த சஹாபாக்களின் சகோதரர் என என்னைக் கூறினீர்களோ அவர்களின் அந்தஸ்தோ மிகவும் உயர்வானதாகும். நான் அவர்களின் சகோதரராக இருக்க தகுதி உடையவனா? இல்லையா? என்று கூட தெரியவில்லை.

அவர்கள் கூறினார்கள்: நமக்கு முன் சென்றவர்கள் இப்போது நான் அனுபவித்து வரும் உலகச் செல்வங்களை அனுபவிக்கவில்லை. அவர்களின் இறையச்சத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்றால் தன்னை மிகவும் பலவீன –மானவராக அவர்கள் கருதி வந்தனர். அல்லாஹ் மீதுள்ள அச்சம் இருந்தது; கவலை இருந்தது. மரணித்த பிறகு இறைவன் நம்மோடு திருப்தி அடைவானா? இல்லையா? என்ற கவலை இருந்தது. மேலும் அல்லாஹ் திருப்தி அடைய வேண்டும் என்றே துஆ செய்து வந்தார்கள். (அத்திபுகாத்துல் குப்ரா லியிப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 88-89. ஹபாப் பின் அர்த். பைரூத்திலுள்ள தாருல் அஹ்யாயுத் துராஸுல் அரபியில் 2003 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அன்னாரின் தியாகமும் மார்க்கத் தொண்டும் எவருக்கும் சளைத்ததாக இருக்கவில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள்தான் இவர்களுடைய

ஜனாஸாவை தொழ வைத்தார்கள். அப்போது அலி (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்தார்கள். அவர்கள் தொடர்பாக புகழ்ந்தும் கூறினார்கள். அந்த சொற்களிலிருந்தே ஹஸ்ரத் ஹுபாப் அவர்களின் அந்தஸ்தைக் கணித்துக் கொள்ளலாம். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் ஹுபாப் மீது கருணை புரிவானாக. அவர் மிகுந்த அன்புடனும் ஆர்வமுடனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு ஹிஜ்ரத் செய்யும் நல்வாய்ப்பினையும் பெற்றார். பிறகு அவர்கள் ஒரு போராளியான வாழ்க்கையை கழித்தார்கள். கடினமான சோதனைகளை கடந்தார்கள். மிகுந்த பொறுமை மற்றும் நிலைப்புத் தன்மையை வெளிப்படுத்தி –னார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அல்லாஹ் நற்செயல்கள் செய்கின்ற அத்தகைய மக்களின் நற்கூலியை வீணாக்குவதில்லை என்று கூறினார்கள். (அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 677. ஹுபாப் பின் அர்த். பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹுபாப் அவர்களின் அந்தஸ்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பார்வையிலும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹுபாபை அழைத்து தனது நாற்காலியில் அமர்த்தினார்கள். மேலும் என்னோடு நீங்களும் இந்த நாற்காலியில் அமரும் தகுதி வாய்ந்தவர்கள் ஆவீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் பிலாலைத் தவிர வேறு யாரும் இந்த நாற்காலியில் அமர்வதற்குத் தகுதியுடையவர்கள் என்று நான் கருதவில்லை என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் பிலாலும் கூட ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றதனால் அதிகமாக கஷ்டப் –பட்டார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஹுபாப் கூறினார்கள்: அமீருல் மூஃமினீன் அவர்களே! சந்தேகமின்றி பிலாலும் உரிமையுடையவராவார். ஆனால் சம்பவம் என்னவென்றால் பிலாலை இணைவைப்பவர் –களிடமிருந்து காப்பாற்றக் கூடியவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவரை வாங்கி, பிறகு அவரை விடுவித்தார்கள். ஆனால் என்னை அநீதியிலிருந்து காப்பாற்ற எனக்கு யாரும் இருக்கவில்லை. எப்படிப்பட்ட நாளும் வந்தது என்றால் என்னை நிராகரிப்பாளர்கள் பிடித்து நெருப்பில் போட்டு விட்டனர். ஓர் அநீதியாளன் எனது நெஞ்சில் கால் வைத்து விட்டான். அதனால் என்னால் அந்த நெருப்பில் இருந்து வெளியேற முடியவில்லை. முதுகு நெருப்புக் கிடங்கில் கிடந்தே வெந்து விட்டது. அதாவது கங்கில் படுக்க வைத்தனர். பிறகு ஹஸ்ரத் ஹுபாப் தனது முதுகுலிருந்து துணியை அகற்றி வெள்ளைக் கோடுகள் நிறைந்த நெருப்பு சுட்ட அடையாளத்தைக் காட்டினார்கள். கொதிக்கும் கங்குகளில் கிடந்ததன் காரணமாக இந்த அடையாளம் ஏற்பட்டது என்றார்கள். தோல் உருகி பிறகு வெந்நிற தோல் புதிதாக வந்துள்ளது என்று காண்பித்தார்கள்.

ஹஸ்ரத் ஹுபாப் பதர் போரிலும் உஹது போரிலும் அகழ் போரிலும் கலந்து கொண்டார்கள். இவை அனைத்திற்குப் பிறகும் அல்லாஹ் என்னோடு திருப்தி அடைவானா? இல்லையா? என மரண நேரத்தில் கவலை கொள்கிறார்கள். (அத்திபுகாதுல் குப்ரா லி இப்னி அஸது தொகுதி 3 பக்கம் 88. ஹுபாப் பின் அர்த். பைரூத்திலுள்ள தாரு அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் 1996 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

பிறகு முஆஸ் பின் ஜபல் என்ற ஒரு சஹாபி இருந்தார்கள். அவர்கள் தொடர்பாக வருகிறது. தஹஜ்ஜுத் தொழக்கூடியவர்களாகவும், நீண்ட இறை வணக்கம் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் தஹஜ்ஜுத் தொழுகை பற்றி அவர்களின் நெருங்கியவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: அதாவது அல்லாஹ்விடம் எனது இறைவனே? இப்போது அனைவரும் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். கண்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. எனது இறைவனே! நீ ஹய் மற்றும் கய்யும் ஆக இருக்கின்றாய். நான் உன்னிடமிருந்து சுவர்க்கத்தை நாடுகிறேன். ஆனால் அமல் செய்வதில் நான் சற்று சோம்பேறியாக உள்ளேன். மேலும் நெருப்பை விட்டும் தூரம் செல்வதில் பலவீனமாகவும் இயலாதவனாகவும் உள்ளேன். நரக நெருப்பு உள்ளது என்பதை நான் அறிவேன். அதிலிருந்து தப்பிப்பதற்கு நன்மைகள் செய்ய வேண்டும். ஆனால் அதிலிருந்து தப்பிப்பதற்கு நான் பலவீனமானவனாக இருக்கிறேன். அல்லாஹ்வே! நீ உன் தரப்பிலிருந்து எனக்கு நேர்வழியை வழங்குவாயாக. மேலும் கியாமத் நாளன்றும் கிடைக்கக் கூடிய நேர்வழியை வழங்குவாயாக. அந்நாளில் நீ உனது வாக்குறுதியை மீற மாட்டாய் என்று அவர்கள் துஆ செய்தார்கள்.

அல்லாஹ்வின் வழியில் அதிகம் செலவழித்தும் வந்தார்கள். செலவழித்தன் காரணமாக அவர்களுக்கு கடனும் அதிகரித்து வந்தது. (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 402. மஆத் பின் ஜபல் (ரலி). பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ர் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் முஆஸைப் பற்றி கஅப் பின் மாலிக் அவர்களின் மகன் கூறிகிறார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் முஆஸோடு வித்தியாசமாக நடந்து கொண்டான். அவர் மிகவும் அழகானவராகவும், வள்ளல் தன்னை உடையவராகவும் இருந்தார்கள். அவர்களுடைய துஆவும் அதிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தது. அல்லாஹ்விடம் கேட்பவற்றை அல்லாஹ்வும் வழங்கி விடுவான். அல்லாஹ்வும் இவர்களோடு சிறிப்பாக நடந்து கொண்டான். கடன் இருந்தாலும் கூட அல்லாஹ் அதை செலுத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்து விடுவான். வியத்தகு புரிதிறன் மற்றும் தொலைநோக்குப் பார்வையை அல்லாஹ் அன்னாருக்கு வழங்கி இருந்தான். (அல் முஃஜமுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 20 பக்கம் 30-32 ஹதீஸ் 44. மஆது பின் ஜபல். தாரு அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

இந்த சஹாபாக்கள் அல்லாஹ்வோடு அன்பு கொண்டிருந்ததன் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களோடும் அன்பு கொண்டிருந்தார்கள் அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாகவே அல்லாஹ்வோடும் அன்பு ஏற்பட்டிருந்தது. ஏனென்றால், அன்னாரின் தூய்மைப்படுத்தும் ஆற்றலே இவர்களிடத்தில் இறை அன்பின் ஞானத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றல் அவர்களிடத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அவ்வாறில்லாமல் இருந்திருந்தால் இதுபோன்ற அன்பு, நேசத்தின் வரலாறு ஒருபோதும் தோன்றி இருக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இருந்த அன்பு எவ்வாறிருந்தது என்றால் அதற்கும் எவ்வித நிகரான உதாரணம் இல்லை.

ஹஸ்ரத் ஷமாஸ் பின் உஸ்மான் தொடர்பாக வரலாற்றில் எப்படிப்பட்ட சம்பவம் எழுதப்பட்டுள்ளது என்றால் அது அன்னாருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோடு இருந்த அன்பின் ஓர் உதாரணமாக ஆனது. மேலும் இஸ்லாத்திற்காக தியாகம் செய்ததற்கான ஒரு மேலான உதாரணமாகும்.

உஹது போரில் ஹஸ்ரத் தல்ஹா அவர்களின் அன்பு பற்றி காணக் கிடைக்கிறது. எவ்வாறு அவர்கள் தனது கைகளை நபி (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன் எவ்வித அம்பும் அன்னாரின் மீது படாதவாறு வைத்திருந்தார்களோ அதே போல் ஹஸ்ரத் ஷமாஸ் அவர்களும் மாபெரும் பங்களிப்பு வழங்கினார்கள். ஷமாஸ் நபி (ஸல்) அவர்களுக்கு

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

முன் நின்று நபி (ஸல்) அவர்களின் மீது செய்யப்பட்ட அனைத்து தாக்குதல்களையும் தன் மீது தாங்கிக் கொண்டார்கள். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஷமாஸ் தொடர்பாக கூறினார்கள். நான் ஷமாஸை ஏதேனும் ஒன்றோடு ஒப்பிட வேண்டும் என்றால் கேடயத்தோடு ஒப்பிடுவேன் என்றார்கள். அவர் உஹது மைதானத்தில் எனக்கு ஒரு கேடயமாகவே ஆகி இருந்தார். அவர் எனது முன்னும் பின்னும் வலப்புறமும் இடம்புறமும் பாதுகாத்தவாறு இறுதி மூச்சு வரை போரிட்டு வந்தார்.

அன்னார் கூறினார்கள்: நான் எப்பக்கம் பார்த்தாலும் ஷமாஸ் மிகவும் துணிச்சலோடு போரிட்டவாறே கண்டேன். எதிரி நபி (ஸல்) அவர்களை தாக்குவதில் வெற்றி அடைந்தபோதும் அன்னாருக்கு மயக்க நிலை ஏற்பட்ட போதும் கூட ஷமாஸ்தான் கேடயமாக மாறி அன்னாருக்கு முன் நின்றார். எதுவரையென்றால் அவர் மோசமாக காயமுற்றார். அதே நிலையில்தான் அவர் மதீனா எடுத்து வரப்பட்டார். ஹஸ்ரத் உம்மு ஸல்மா அவர்கள் இவர் எனது தந்தையின் சகோதரரின் மகள் ஆவார். நான் இவருக்கு நெருங்கிய உறவினர் ஆவேன். எனவே எனது வீட்டில் இவருக்கு சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்றார்கள். ஆனால் அதிகமான காயங்களின் காரணமாக ஒன்றரை அல்லது இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மற்ற ஷஹீதுகள் அடக்கப்பட்டது போல் ஷமாஸை அவருடைய ஆடையிலேயே அடக்கம் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அத்திபுகாதுல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 131. ஷமாஷ் பின் உஸ்மான் பக்கம் 115. தல்ஹா பின் உபைது (ரலி). பைருத்திலுள்ள தாரு அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் 1996 -ல் வெளியிடப்பட்டது)

பிறகு ஸயீத் பின் ஸைத் என்ற ஒரு சஹாபி இருந்தார். இவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் மச்சான் ஆவார்கள். இவர் இஸ்லாத்தை ஏற்ற –போதும் ஹஸ்ரத் உமர் இவரை வெட்டுவதற்காக கையை ஓங்கியபோதும் அவருடைய மனைவி அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரி முன்னால் வந்ததன் காரணமாக இவர்கள் காயமடைந்தார்கள். அதன் தாக்கம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மீது எந்த அளவுக்கு ஏற்பட்டது என்றால் இஸ்லாத்தை ஏற்பதன் பக்கம் கவனம் ஏற்பட்டது. (சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 251-252. இஸ்லாம் உமர் பின் கத்தாப் (ரலி). பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2001 -ல் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸயீத் அவர்களுக்கு இறைவன் மீதுள்ள அச்சத்தின் தரம் தொடர்பாக ஒரு சம்பவம் கிடைக்கிறது. அவர்களுக்கு ஒரு நிலம் இருந்தது. அதுவே அவரது வாழ்வாதாரமாக இருந்தது. அந்த நிலத்தோடு ஒரு பெண்ணுடைய நிலமும் இருந்தது. அந்த பெண் இவர்களின் நிலத்தின் சில பகுதி தன்னுடையது என்று வாதித்தாள். அதாவது, இவர்கள் அந்தப் பெண்ணின் நிலத்தின் ஒரு பகுதியை அபகரித்து விட்டதாகக் கூறினாள். ஹஸ்ரத் ஸயீத் அவர்கள் எவ்வித வழக்கின் தேவையும் இல்லை என்று கூறியவாறு தனது முழு நிலத்தையுமே விட்டு விட்டார்கள். அந்தப் பெண்ணுக்கு கொடுத்து விட்டார்கள்.

அவர்கள் கூறினார்கள்: எவர் அநியாயமாக ஒருவருடைய நிலத்தில் ஓர் ஜாண் அளவு நிலைத்தை அபகரித்தாலும் அவர் கியாமத் நாளன்று ஏழு நிலத்தின் சுமையைச் சுமக்க வேண்டியது வரும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். எனவே நான் இக்குற்றச்சாட்டை என் மீது சுமத்திக் கொள்ள விரும்பவில்லை. சண்டையிடவும் விரும்பவில்லை. ஆனால் ஒருவருடைய நிலத்தை இவர் அபகரித்து விட்டார் என்றும் கூட உலகம் கூறாமல் இருக்க வேண்டுமல்லவா? ஏனென்றால், இவர் ஒரு பெண்ணின் நிலைத்தை அபகரித்து விட்டார் என்பது தெரிய வந்தபோது திரும்பக் கொடுக்கிறார் என்றும் உலகம் கூறலாம். எனவே தன்னை இந்த பழியிலிருந்து தூய்மையாக்கு –வதற்கு அந்த பெண்ணிற்காக துஆ செய்தார்கள். இவர்கள் அதிகம் துஆ செய்யக் கூடியராகவும் இருந்தார்கள். இவ்வாறு துஆ செய்தார்கள். அதாவது இந்த பெண் அநீதிக்கு ஆளானவள். இல்லையென்றால் அநீதி இழைத்தாள் என்றால் அல்லாஹ் இவளை பிடிப்பானாக. அவளின் முடிவு தீயதாகட்டுமாக என்று துஆ செய்தார்கள். பிறகு அந்த பெண் குருடியாகி மரணித்து, பிறருக்கும் படிப்பினை ஆனாள் என்றும் சிலர் கூறுகின்றனர். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ∴பராயிஸ் பாபு தஹ்ரீமுல் ஸுல்ம் ஹதீஸ் 4134)

உண்மையைக் கூறுவதும் எவருக்கும் அஞ்சாதிருப்பதும் சஹாபாக்களின் தனிச் சிறப்பாகும். ஹஸ்ரத் ஸயீத் பின் ஸைத் தொடர்பாக வருகிறது. ஒரு நாள் கூஃபாவில் அமீர் மூஆவியாவால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஒரு நாள் ஜாமிஆ பள்ளிவாயிலில் அமர்ந்திருந்தார். ஹஸ்ரத் ஸயீத் அவர்களும் வந்தார்கள். அவர் மிகுந்த மரியாதையுடன் அவர்களை வரவேற்றார்கள். பிறகு தன்னோடு அமர்த்தினார்கள். அதே வேளையில் கூஃபாவைச் சேர்ந்த ஒருவர் வந்து ஹஸ்ரத் அலி அவர்களை ஏசிப் பேசினார். அவர் மீது ஸயீத் மிகவும் கோபம் கொண்டார்கள். கவர்னர் முன்னால் பேசுகிறார்; எனவே நான் அமைதியாக இருக்க வேண்டும் என்று இருக்கவில்லை. நான் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டுள்ளேன். ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம், ஹஸ்ரத் ஸஅத் மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அஃவ்ப் சுவர்க்கத்தில் இருப்பார்கள் என்றும் கூறினார்கள். பத்தாவது ஒருவர் உள்ளார். அவர் பெயரை நான் கூறமாட்டேன் என்று கூறினார்கள். அழுத்தம் கொடுத்துக் கேட்டபோது பத்தாவது நான் ஆவேன். அதாவது ஸயீத் பின் ஸைத் என்றார்கள். (சுனன் அபீதாவூது கிதாபுஸ் ஸுன்னதி பாபு ∴பில் குல∴பாயி ஹதீஸ் 4649-4650)

அன்னாரிடமிருந்து இன்னோர் அறிவிப்பும் உள்ளது. அது "மிக அதிகமாக ஹரமான ஒன்று, முஸ்லிமின் கண்ணியத்தின்மீது அநியாயமாக தாக்குதல் நடத்துவதாகும்" என்பதாகும்.

இன்று இதைத்தான் முஸ்லிம்கள் மறந்து விட்டனர். பெரிய அளவில் இருந்து சிறிய அளவில் வரை, சிறிய விவகாரங்கள் வரை நாம் பார்க்கிறோம். முஸ்லிம்கள், முஸ்லிம்களின் கண்ணியத்தின் மீது தன் சுயலாபத்திற்காக தாக்குதல் நடத்துகின்றனர்.

பிறகு இன்னொரு சஹாபி ஹஸ்ரத் சுஹைப் பின் ஸனான் ரூமி பற்றி வருகிறது: அல்லாஹ்வின் அனுமதியுடன் முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்தபோது ஹஸ்ரத் ஸுஹைப் அவர்களும் ஹிஜ்ரத் செய்ய எண்ணினார்கள். அன்னார் முதலில் ஓர் அடிமை என்றுதான் வந்தார்கள். பிறகு சிறிது சிறிதாக முன்னேறி அதாவது அடிமையிலிருந்து விடுதலையாகி முன்னேறி வியாபாரம் செய்து செல்வந்தரான வியாபாரி ஆனார்கள். வியாபாரம் மூலம் அதிகம் செல்வம் சேர்த்தார்கள். ஹிஜ்ரத் செய்து கிளம்பியபோது மக்காவாசிகள் அவர்களிடம், நீர் ஓர் அடிமை என்ற அடிப்படையில்தான் இங்கு வந்தீர்கள். எனவே இங்கிருந்து சம்பாதித்த செல்வத்தை நீங்கள் எடுத்துச் செல்ல ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றனர்.

அதற்கு அவர்கள் அப்படியென்றால் நான் என்னுடைய செல்வத்தை விட்டு விடுகிறேன் என்றார்கள். நான் செல்வத்தை விட்டு விட்டால் என்னைப் போக விடுவீர்கள்தானே? என்று அவர்கள் கேட்டார்கள்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

எவ்வாறிருப்பினும், அவர்கள் தனது பாதி செல்வத்தை மக்காவாசிகளிடம் ஒப்படைத்தார்கள். ஹிஜ்ரத்திற்கான திட்டம் தீட்டினார்கள். அவர்கள் தனது குடும்பத்துடன் மதீனாவை நோக்கி கிளம்பியபோது சில குறைஷிகள் அன்னாரை பின் தொடர்ந்தனர். ஸுஹைப் சிறந்த வீரர் ஆவார்கள். அம்பு எய்துவதிலும் திறமை பெற்றிருந்தார்கள். அவர்கள் நிராகரிப்பவர்களைக் கண்டவுடன் தனது அம்புகளின் பையிலிருந்து அனைத்து அம்புகளையும் எடுத்து பரத்தி வைத்தார்கள். மேலும் நிராகரிப்பாளர்களைப் பார்த்து குறைஷிகளே! நான் உங்கள் அனைவரையும் விட சிறந்த அம்பு எய்துபவன் ஆவேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனது இறுதி அம்பு முடியும் முன் நீங்கள் என்னை அடைய முடியாது. அத்துடன் என்னிடம் வாளும் உள்ளது. அத்துடன் சண்டையிட வேண்டியது வரும். நீங்கள் என்னை அமைதியாக செல்ல விடுங்கள். அதுதான் சிறந்தது. அதற்கு பதிலாக நான் இன்ன இடத்தில் வைத்துள்ள மீதமுள்ள செல்வத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் மிகவும் நுட்பமான ஞானத்துடன் தனது செல்வத்தை தியாகம் செய்து தனது குழந்தைகளையும் காப்பாற்றினார்கள். தானும் பாதுகாப்பாக சென்றார்கள். ஸுஹைப், நபி (ஸல்) அவர்களிடம் வந்தபோது எவ்வாறு தனது செல்வத்தை தியாகம் செய்து தனது ஈமான் மற்றும் உயிரைக் காத்துக் கொண்டு இங்கு வந்தோம் என்பதை எடுத்துக் கூறினார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இழப்பிற்கான வியாபாரம் செய்யவில்லை. மாறாக, சிறந்த வாணிபம் செய்துள்ளீர்கள் என்றார்கள். (அத்திபுகாத்துல் குப்ரா லியிப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 121. ஷுஐப் பின் ஸனான் (ரலி). பைரூத்திலுள்ள தாரு அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் 1996 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஒவ்வொரு சஹாபிக்கும் ஒவ்வொரு தனிச்சிறப்பும் நடைமுறையும் உள்ளது.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹுஹைபிடம், நீங்கள் அதிகமாக மக்களுக்கு உணவு அளிக்கின்றீர்கள். அதில் வீண் விரயம் இருக்குமோ என்ற அச்சம் உள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸுஹைப் அவர்கள் கூறினார்கள்: நான் உணவளிப்பதும் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு கட்டளைக்கிணங்கவே ஆகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: மக்களுக்கு உணவளிப்பவரும், ஸலாத்தைப் பரப்பக் கூடியவரும் உங்களில் சிறந்தவராவார் என்று கூறினார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காதுஹு என்று மக்களுக்கு கூறுவது ஒரு நன்மையாகும். இதை சிறந்தவர்களின் அடையாளமாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த அறிவுரையை பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டேன். அதை நான் பற்றிப் பிடித்துக் கொண்டேன். அவர்கள் கூறினார்கள்: நான் ஆகுமானதை தவிர வீணாக செல்வத்தைச் செலவு செய்வதில்லை. (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 924 ஹதீஸ் 24422. முஸ்னது ஷுஐப் பின் ஸனான் (ரலி). பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் இல்மிய்யாவில் 1998 -ல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸுஹைப் அவர்களின் அந்தஸ்து ஹஸ்ரத் உமர் அவர்களின் பார்வையிலும் உயர்ந்ததாக இருந்தது. ஹஸ்ரத் உமர் அவர்கள் தனது ஜனாஸாவை ஹஸ்ரத் ஸுஹைப்தான் தொழ வைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். மேலும் அடுத்த கலீஃபா தேர்ந்தெடுக்கப்படாத வரை தொழுகைகளில் இவர்களே இமாமத்தும் செய்து வந்தார்கள். (அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 423. உபைத்துல்லாஹ் பின் உமர். பைரூத்திலுள்ள தாருல் ∴பிக்ரில் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸாமா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் விடுவிக்கப்பட்ட அடிமை ஹஸ்ரத் ஸைத் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் எப்படிப்பட்ட நற்பேறு பெற்றவர்களாக இருந்தார்கள் என்றால் இவர்கள் நபி (ஸல்) அவர்களின் பாசத்தை பெற்றிருந்தார்கள். (அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 91. உஸாமா பின் ஸைத் (ரலி). பைரூத்திலுள்ள தாருல் ∴பிக்ரில் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோடு எந்த அளவுக்கு அன்பு காட்டி வந்தார்கள் என்றால் ஹஸ்ரத் உஸாமா அவர்களே கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைன் மற்றும் அவர்களை அன்னாரின் இரு தொடைகளில் உட்கார வைப்பார்கள். மேலும் அல்லாஹ்வே! இவர்கள் இருவர்களோடும் நீ அன்பு செலுத்துவாயாக. நானும் இவர்களோடு அன்பு கொள்கிறேன் என்றார்கள். (அல்மு∴ஜமுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 3 பக்கம் 47 ஹதீஸ் 2642. அஹ்யாயித் துராஸில் அரபிய்யில் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

ஆனால் தர்பிய்யத் மற்றும் மார்க்கம் என்று வரும்போது அங்கு முழுக்க முழுக்க அல்லாஹ்வின் கட்டளைகள் மட்டும்தான். பிறகு தனிப்பட்ட அன்புகள் முடிந்து விடுகின்றன.

ஹஸ்ரத் உஸாமா, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் சிறிய வயதுடையவராக இருந்தார்கள். அன்னாரின் வஃபாத்தின்போது கூட இவர்களின் வயது 18 ஆகத்தான் இருந்தது. இவர்களுக்கு சில போர்களில் பங்கு பெறும் நற்பாக்கியமும் கிடைத்தது. ஒரு சம்பவம் வருகிறது. போரில் ஒரு நிராகரிப்பாளர் ஒருவர் உஸாமிற்கு முன்னால் வந்தபோது உடனடியாக கலிமா சொல்லி விட்டார். ஆனால் இவர்கள் பிறகும் கூட அவரை கொன்று விட்டார்கள். மரண பயத்தால்தான் இவர் கலிமா கூறினார் என்று நினைத்து கொன்று விட்டார்கள்.


ஹஸ்ரத் உஸாமா கூறுகின்றார்கள்: நான் இந்த சம்பவத்தை பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறிய போது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அந்த மனிதர் கலிமா கூறிய பிறகும் கூடவா அவரை நீங்கள் கொன்றீர்கள்? என்று கேட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அவரின் உள்ளத்தை பிளந்து பார்த்தீர்களா? அவர் கலிமா கூறிய பிறகுமா நீங்கள் அவரை கொன்றீர்கள் என்று மீண்டும் கூறினார்கள்.


உஸாமா கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த வார்த்தைகளை எந்த அளவுக்கு மீண்டும் மீணடும் கூறினார்கள் என்றால் அந்தோ! நான் முஸ்லிமாக இல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என்று எண்ணினேன்.

உஸாமா கூறுகின்றார்கள்: இனிமேல் ஒருபோதும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறும் எவரையும் கொல்ல மாட்டேன் என நான் அன்று உறுதிமொழி எடுத்துக் கொண்டேன். (சஹீஹ் புகாரி. கிதாபுல் மகாஸி பாபு பஅஸ்ஸன்னபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உஸாமா பின் ஸைத் (ரலி) ஹதீஸ் 4269)

இந்த விஷயங்கள் இன்றைய முஸ்லிம் –களுக்கும் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இஸ்லாத்தின் பெயரால் அந்நியர்கள்

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal
Grill house
multi cuisine family
restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

மீது ஒரு பக்கம் அநீதியிழைத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். மறுபக்கம் முஸ்லிம்கள் முஸ்லிம்களையே கொன்று குவிக்கின்றான். சிரியா போர் தொடர்பாக கூறப்படுவது என்ன வென்றால், கடந்த சில ஆண்டுகளில் போர் ஆரம்பத்திலிருந்து இலட்சக்கணக்கானோர் அங்கு கொல்லப்பட்டுள்ளனர். முஸ்லிம்களே முஸ்லிம்களை கொன்றனர். கலிமா சொல்லக் கூடியவர்களே ஒருவர் மற்றவரைக் கொல்கின்றனர் அல்லது அதன் பெயரால் கொல்கின்றனர். யமனிலும் கலிமா கூறக் கூடியவர்கள் கொல்லப் –படுகின்றனர். வேறு ரீதியிலான அநீதிகள் அங்கு இழைக்கப்படுகின்றன; மக்கள் துன்புறுத்தப்படு –கிறார்கள். அல்லாஹ் இந்த முஸ்லிம்களுக்கு அறிவை வழங்குவானாக. இவர்கள் சஹாபா மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நேசம் கொண்டுள்ளோம் என முழக்கமிடுபவர்களாக மட்டும் இல்லாதிருப்பார்களாக. மாறாக, அவர்களின் செயல்களின்படி செயல்படுபவர்களாக இருப்பார்களாக. ஆனால் அசல் விஷயம் என்ன –வென்றால், இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் தங்களது சுய இலாபத்தை ஈட்டுகின்றனர்.

இஸ்லாமிய போதனைகளின் அலிஃப், பே கூட இவர்களுக்கு தெரியவில்லை. தமது ஆதிக்கத்தை நிரூபிக்கவே இவர்கள் முயற்சி செய்கிறார்கள். அல்லாஹ்வின் பெயர் வாயில் உள்ளது. ஆனால் உள்ளத்தில் முழுக்க முழுக்க சுயநலம் மட்டுமே உள்ளது. உலகில் இக்காலத்தில் அல்லாஹ் உண்மையான தக்வாவை உருவாக்குவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். இந்த முஸ்லிம்கள் அன்னாரை ஏற்காதவரை இவர்களின் நிலைமையை சீர்திருத்த முடியாது. இந்த மக்களின் நிலையைப் பார்த்து நாம் நன்றி செலுத்த வேண்டும். நன்றியின் உணர்வில் முன்னேற வேண்டும். அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக அனுப்பியுள்ள அந்த வழிகாட்டியை ஏற்கும் நற்பாக்கியத்தை நமக்கு வழங்கியுள்ளான். அன்னார் நமக்கு சஹாபாக்களின் உயர்ந்த அந்தஸ்து தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளார்கள். மேலும் அவர்களின் பின்னால் செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் சஹாபாக்களின் முன்மாதிரிகள் எப்படிப்பட்டது என்றும், அதே முன்மாதிரிக்கேற்ப நடக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். எனவே இதை நம் முன்னால் வைத்தால் மட்டுமே அன்னாரின் கூற்றுக்களைப் புரிந்து அதன்படி நடக்க முயற்சி செய்தால் மட்டுமே உண்மையான முஸ்லிமாக ஆக முடியும்.

அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் ஆசைகள் மற்றும் நோக்கங்களை விட்டு விலகி இறைவனிடம் வராத வரை அவன் தனக்கு இழப்பையே ஏற்படுத்திக் கொள்கிறான். ஆனால் அவன் தனது அனைத்து மன இச்சைகள் மற்றும் நோக்கங்களிலிருந்து விலகி வெறுங் கையோடும், தூய உள்ளத்தோடும் இறைவனிடம் சென்றால் இறைவன் அவனுக்கு வழங்குகின்றான்; இறைவன் அவனை பாதுகாக்கின்றான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், மனிதன் மரணிப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். மேலும் அவனது வழியில் இழிவையும் மரணத்தையும் வரவேற்பவனாக இருக்க வேண்டும்.

பிறகு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: பாருங்கள்! உலகம் அழியக்கூடிய ஒன்றாகும். ஆனால் அதை இறைவனுக்காக விடுபவருக்கே அதன் இன்பமும் கிடைக்கின்றது. இதனால்தான் இறைவனுக்கு நெருக்கமாக இருக்கக் கூடிய சஹாபாக்களின் சம்பவங்களைக் கண்டோம். இறைவனுக்காக உலகப் பொருள்களை விட்டபொழுது அல்லாஹ் அவர்களுக்கு அதிகமாக அருள் செய்தான். அவர்கள் முழுமையாக இறைவனுக்காக ஆகி இருந்தனர். ஆனால் பிறகும் கூட அவர்களுக்கு தங்களது மறுமையைப் பற்றிய கவலை இருந்தது.

அன்னார் கூறுகிறார்கள்: அல்லாஹ்வுக்கு நெருக்கமாக ஆகி விடுபவருக்கு இறைவன் உலகில் வெற்றியை வழங்குகிறான். இந்த வெற்றிக்காகத்தான் உலகவாதிகள் ஆயிரம் முயற்சி செய்கின்றனர். ஏதேனும் பட்டம் கிடைத்து விட வேண்டும். மதிப்பு மரியாதை கிடைக்க வேண்டும். மேன்மை அல்லது அரசவையில் நற்கூலி கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர்.

சுருக்கமாக, அனைத்து உலக மதிப்பு மரியாதைகளும் இறைவனுகாக அனைத்தையும் விட்டு விட முயற்சி செய்பவர்களுக்கே கிடைக்கிறது. மேலும் அனைத்து உள்ளங்களிலும் அவர்களின் கண்ணியமே இடப்படுகின்றது. இறைவனுக்காக அவர்கள் அனைத்தையும் விட்டு விடுகின்றனர்.

சுருக்கமாக, இறைவனுக்காக இழப்பவர்களுக்கு அனைத்தும் வழங்கப்படுகின்றன. அவர்கள் இறைவழியில் இழந்ததை விட பன்மடங்கு அதிகமாக பெறாத வரை அவர்கள் மரணிப்பதில்லை. இறைவன் யாரிடமும் கடன் வைப்பதில்லை. ஆனால் இதை கேட்பவர்கள் இதைப் பற்றி அறிந்தவர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர் என்பது வருத்தத்திற்குரியதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 398-399; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நம் அனைவரையும் பெருமானார் (ஸல்) அவர்களின் சுற்றுக்களின் படி அமல் செய்தவாறு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றக் கூடியவர்களாகவும், அவனது கட்டளைகளின் படி அமல் செய்பவர்களாகவும் ஆக்குவானாக.

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா ஹாஸிர் தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய அமத்துல் மஜீத் அஹ்மது சாஹிபா உடையதாகும். இவர் யூ.கே –ன் நாயிப் அமீர் மற்றும் தலைமையக சொத்துத் துறையின் இன்சார்ஜ் சவுத்ரி நாஸிர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். 9 ஜனவரி 2018 அன்று இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி மவ்லவி அப்துல்லாஹ் சனோரி சாஹிப் அவர்களின் மகன் வழி கொள்ளுப் பேத்தி ஆவார்கள். திருமணத்திற்குப் பிறகு 1978 முதல் ஃபஸல் பள்ளிவாயிலின் அருகே வசித்து வந்தார்கள். தொழுகை மற்றும் நோன்பை பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். சந்தாக்களை முறையாக செலுத்துபவர்; கருணை உள்ளவர்; நன்கு பழகக் கூடியவராகவும், விருந்து உபசரிப்பவராகவும், நல்ல கலப்பற்ற பெண்மணி –யாகவும் இருந்தார்கள். அனைவரின் துக்கம் மற்றும் வேதனையில் பங்கெடுப்பவரும், கிலாஃபத்தோடு அதிக தொடர்பு உடையவராகவும் இருந்தார்கள். தனது குழந்தைகளுக்கும் இந்த தொடர்பை கொண்டிருக்குமாறு அறிவுறுத்தி வந்தார்கள். தொழுகையைப் பேணி வருமாறு அறிவுறுத்தி வந்தார்கள். குழந்தைகளுக்கு நல்ல தர்பிய்யத் வழங்க முயற்சி செய்தார்கள். அத்துடன் தமது பகுதியின் குழந்தைகளுக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கும் நல்வாய்ப்பையும் பெற்றார்கள். யூ.கே லஜ்னா அமைப்பில் ஹித்மத்தே கல்க் மற்றும் ஸியாஃபத் (விருந்தோம்பல்) துறைகள் தவிர யூ.கே. ஜல்ஸா ஸலானாவில் விருந்து உபசரிப்புப் பொறுப்பாளராகவும் பணியாற்றும் நற்பேறு பெற்றார்கள். பின்னால் விட்டுச் சென்றவர்களில் கணவர் மியான் சவுத்ரி நாஸிர் அஹ்மத் சாஹிப் அவர்களும் நான்கு மகள்களும் உள்ளனர்.

யூ.கே –வின் தற்போதய மற்றும் முன்னாள் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ் இருவருமே இவர்கள் தொடர்பாக எழுதியுள்ளது என்னவென்றால், மிகவும் நேசம் கொள்ளக் கூடிய பெண்மணி ஆவார்கள். அவர்களை சந்திக்கக் கூடிய அனைவரும் தன்னலமற்ற அன்பை உணர்ந்து கொள்வர். மாநாட்டில் நீண்ட காலம் விருந்தோம்பல் துறையின் நாஸிம் ஆகவும் பணியாற்றியுள்ளார்கள். கடின உழைப்போடும் கலப்பற்ற தன்னையோடும் இந்த தொண்டை நிறைவேற்றினார்கள் விருந்தோம்பல் செயலராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பினை பெற்றார்கள். மிகவும் பணிவுடன் இப்பணியை செய்தார்கள்.

அல்லாஹ் மர்ஹுமாவின் பதவிகளை உயர்த்துவானாக. மேலும் இவர்களின் நன்மைகளை இவர்களின் மகள்களிலும் அல்லாஹ் தொடரச் செய்வானாக. நான் கூறியது போன்று தொழுகைகளுக்குப் பிறகு வெளியே சென்று நான் ஜனாஸா ஹாஸிர் தொழ வைப்பேன். சகோதரர்கள் இங்கேயே ஸஃப் –ஐ சரி செய்து கொள்ளுங்கள்.

★ ★ ★ ★ ★

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

-யுள்ளான். நீங்கள் இடுகின்ற கட்டளையை செய்வதற்காகவே நான் வந்துள்ளேன். முஹம்மது (ஸல்) அவர்களே! இந்தப் பள்ளத்தாக்கில் உள்ள இந்த இரண்டு மலைகளை அவர்கள் மீது விழ வைப்பதை நீங்கள் விரும்புகின்றீர்களா? என்று அவர் கேட்டார். கருணையின் வடிவமான நபி (ஸல்) அவர்கள் இல்லை; இல்லை. அவ்வாறு செய்யாதீர்கள். அல்லாஹ் இவர்களின் சந்ததிகளிலிருந்து ஏக இறைவனை வணங்கக் கூடிய அவனுக்கு இணையாக யாரையும் வைக்காத மக்களை உருவாக்குவான் என்று கூறினார்கள். (புகாரி)

தமது சொற்பொழிவின் இறுதியில் நாஸிர் சாஹிப் அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுஃல்லாஹுஃத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 8 செப்டம்பர் 2017 -ல் ஆற்றிய ஜுஃமுஆ பேருரையில் உள்ள சில கட்டளைகளை எடுத்துக் கூறினார்கள். ஹுஃஸுஃர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாம் நமது தப்லீக் பணிகளை தொடர்ந்து செய்து வர வேண்டிய தேவை இருக்கின்றது. வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை தர்பிய்யத் வாரம் அல்லது தப்லீக் வாரம் கொண்டாடுவது, சாலைகளில் நின்றவாறு பிரசுரங்களை வழங்குவது, பிறகு தப்லீகிற்குரிய உரிமையை நாம் செலுத்தி விட்டோம் என்று கருதுவது சரியல்ல. அல்லாஹ் ஞானத்துடனும், நல்ல அறிவுரையுடனும், உறுதியான ஆதாரத்துடனும் தப்லீக் செய்யுமாறு கட்டளை இட்டிருப்பதற்கேற்ப செயல்படுவது நமது பணி ஆகும். நிரந்தர மனப்பாங்குடன் அதை செய்து கொண்டே செல்வது நமது பணியாகும். அதன் விளைவுகளை நான் உருவாக்குவேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான். எவர்கள் வழிகேட்டில் திசை தெரியாமல் அலைந்து கொண்டிருப்பர் என்பதையும், எவர்கள் நேர்வழியை பெறுவார்கள் என்பதை பற்றிய அறிவும் அல்லாஹ்விற்கே இருக்கின்றது. நம்மிடம் கேள்வி கேட்பதாக இருந்தால் நாம் தூதுச் செய்தியை எட்ட வைத்தோமா? அல்லது நமது தப்லீகின் கடமைகளை நாம் ஏன் நிறைவேற்றவில்லை? என்ற கேள்வியையே அல்லாஹ் நம்மிடம் கேட்பான். அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கு ஏற்ப செயல்பட்டு அதை நாம் ஏன் செய்யவில்லை? என்று கேட்பான். எவர் நேர்வழியைப் பெறுவார்? எவர் நேர்வழியைப் பெறமாட்டார்? என்பதைப் பற்றிய அறிவு அல்லாஹ்விற்கு மட்டுமே இருக்கின்றது. நாம் நமது கடமையை நிறைவேற்றுகின்றோம் என்றால் மரணத்திற்குப் பிறகு குறைந்தபட்சம் உலகம், இறைவனிடம் எங்களுக்கு இஸ்லாம் பற்றிய தூதுச் செய்தி கிடைக்கவில்லை என்று கூற முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் அதன் உண்மையை வெளிப்படுத்துவதற்கு எல்லாவற்றிற்கும் முதலாவதாக இந்த அம்சம் இருக்க வேண்டும். அதாவது, நீங்கள் உண்மையான முஸ்லிம்களின் முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டுங்கள். இரண்டாவது அம்சம், இஸ்லாத்தின் சிறப்புகளையும் அதன் முழுமைத் தன்மையையும் உலகில் பரப்புங்கள். ஹுஃஸுஃர் அவர்கள் கூறினார்கள்: தப்லீகிற்காக நாம் நமது நிலைமைகளில் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியை ஒருவர் வெளிப்படுத்தும்போது மக்களின் கவனம் நம் பக்கம் திரும்பாமல் இருக்க முடியாது. இதனால் முறையாக தப்லீகிற்கான வழிகள் திறக்க ஆரம்பித்து விடுகின்றன. அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

நாஸிர் சாஹிப் அ∴லா அவர்களின் இந்த சொற்பொழிவிற்குப் பிறகு மாநாட்டின் முதல் நாளின் அமர்வு நிறைவு பெற்றது.

## முதலாவது நாளின் இரண்டாவது அமர்வு:

லுஹர், அஸ்ர் தொழுகைக்குப் பிறகு முதல் நாளின் இரண்டாவது அமர்வு மதியம் 2 மணி 15 நிமிடம் ஆனபோது ஆரம்பமானது. இந்த அமர்வு மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் (நாஸிர் அ∴லா மற்றும் காதியான் ஜமாஅத்தின் அமீர்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருக்குர்ஆன் ஓதப்பட்ட பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கவிதை வரிகள் பாடப்பட்டன.

❖ இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை த∴லீமுல் குர்ஆன் வக்∴பே ஆர்ஸியின் கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் மதிப்பிற்குரிய மவ்லவி இனாயத்துல்லாஹ் சாஹிப் அவர்கள் நிகழ்த்தினார்கள். சொற்பொழிவின் தலைப்பு "ஜமாஅத் சகோதரர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் பொறுப்புகளின் அடிப்படையில் தற்காலத்தில் த∴லீமுல் குர்ஆனின் தேவையும் அதன் முக்கியத்துவமும்" என்பதாகும். நாஸிர் சாஹிப் அவர்கள் சொற்பொழிவின் ஆரம்பத்தில் சூரா அல் ஜுஃமுஆவின் 3 மற்றும் 4 -வது வசனத்தை ஓதினார்கள். பிறகு அதன் மொழியாக்கத்தைப் படித்தார்கள். பிறகு இவ்வாறு கூறினார்கள்: இந்த வசனங்களில் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களின் இரண்டு தோற்றங்கள் பற்றியும் அவர்களுக்கு இருக்கின்ற அந்த மகத்தான பொறுப்புகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளான். அது பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள நிரந்தரமான மகத்தான ஷரீஅத் அதாவது திருக்குர்ஆனிற்கு ஒவ்வொரு காலத்திலும் இருக்கின்ற முக்கியத்துவத்தையும் தேவையையும் எடுத்துக் கூறுகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களின் முதல் தோற்றமானது அரபு நாட்டில் அவர்களின் மூலமாக வெளிப்பட்டது. அந்த சமயத்தில் நாலாபுறமும் இருள்கள் மற்றும் வழிகேட்டின் காலக்கட்டமாக இருந்தது. மனித இனத்தின் நிலைமைகள் மிகவும் மோசமானதாக இருந்தது. இது பற்றிய வரைபடத்தை அல்லாஹ் ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ அதாவது, கடலும் கரையும் குழப்பத்தில் இருந்தது என்று கூறியதன் மூலம் படம்பிடித்துக் காட்டியுள்ளான்.

சுருக்கமாக, எல்லா இடங்களிலும் குழப்பம் இருந்தது. இத்தகைய மோசமான குழப்பங்கள் நிறைந்திருந்த காலத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் முழுமையான இறுதி ஷரீஅத்தான திருக்குர்ஆனின் மூலமாக இறைவன் அவர்களுக்கு வழங்கிய தூய்மைப்படுத்துகின்ற ஆற்றல் மற்றும் அவனது உதவி மற்றும் ஆதரவின் மூலமாக மனித இனத்தை தூய்மைப்படுத்தி அவர்களிடம் மகத்தான புரட்சியை ஏற்படுத்தினார்கள்.

மவ்லவி சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீ∴பாக்களின் கட்டளைகளின் ஒளியில் திருக்குர்ஆனின் போதனைகளின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்) அவர்களின் சில கட்டளைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

24 செப்டம்பர் 2004 -ல் நிகழ்த்திய ஜுஃமுஆ உரையில் ஹுஃஸுஃர் (அய்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயம் தொடர்பாக கவலைப்பட வேண்டும். ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி சிந்தனை செய்ய வேண்டும். அதாவது, அஹ்மதி என்று தன்னை பற்றி கூறிய பிறகு இந்த விஷயங்களுக்கு ஏற்ப செயல்படாமல் இருந்து அஹ்மதிய்யத்திலிருந்து விலகி அவர்கள் தொலைவில் சென்றுவிடவில்லையே என்பதைப் பார்க்க வேண்டும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, நமக்கு எவையெல்லாம் கிடைக்க வேண்டியதிருக்கின்றனவோ அவை திருக்குர்ஆனின் அருளினாலேயே கிடைக்கும். திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு ஏற்ப செயல்படுவதில்தான் அருள் இருக்கின்றது.

இவ்வாறே 23 ஜுன் 2017 -ல் ஆற்றிய ஜுஃமுஆ பேருரையில் ஹுஃஸுஃர் (அய்) அவர்கள் ஜமாஅத்தின் பொறுப்பாளர்களின் பொறுப்பைப் பற்றி கவனமூட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

பிறகு ரமலானில் குறிப்பாக திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. பல மக்களும் குறைந்தபட்சம் திருக்குர்ஆனை முழுமையாக ஒருமுறையாவது ஓதி முடிக்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்கின்றனர். ஏனென்றால், இது சுன்னத்தும் ஆகும். ஆனால், இந்த மாதத்தில் திருக்குர்ஆன் ஓதுவதன் பக்கம் கவனம் ஏற்படுவது மற்றும் குர்ஆனை முறையாக ஓதி வருவது ஆகியவை இந்த பக்கமும் நமக்கு கவனமூட்டக் கூடியவையாக இருக்க வேண்டும். அதாவது, நாம் தினந்தோறும் திருக்குர்ஆனின் ஏதாவது ஒரு பகுதியை முறையாக ஓதி வர வேண்டும். அல்லாஹ் எங்கு தொழுகையின் பல்வேறு நேரங்களைப் பற்றி நமக்கு கவனமூட்டி இருக்கின்றானோ மேலும் அதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறியுள்ளானோ அங்கு இதையும் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்: وَقُرْآنَ الْفَجْرِ ۖ إِنَّ قُرْآنَ الْفَجْرِ كَانَ مَشْهُودًا அதாவது அதிகாலையில் திருக்குர்ஆன் ஓதுவதற்கும் முக்கியத்துவம் வழங்குங்கள். நிச்சயமாக அதிகாலையில் திருக்குர்ஆன் ஓதுவது எத்தகைய செயல் என்றால் அதற்கு சாட்சி கூறப்படுகின்றது. எனவே, திருக்குர்ஆனை ஓதுவது என்பது சில

குறிப்பிட்ட நாட்களுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. மாறாக தொழுகைகளுடன் சேர்த்து அதை பற்றி எடுத்துக் கூறி அதன் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனை ஓதுவதுடன் அதை புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் மூலம் அல்லாஹ்வின் கட்டளைகள் பற்றி நமக்குப் புரியும். இந்த காலத்தில் குறிப்பாக திருக்குர்ஆனை முறையாக படிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக் கொள்பவர்கள் கூட இந்த போதனையை மறுத்து விட்டனர்.

நாஸிர் சாஹிப் அவர்கள் தமது சொற்பொழிவின் இறுதியில் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் நம் அனைவருக்கும் குறிப்பாக ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்) அவர்களின் கட்டளைகளை கண்முன் நிறுத்தியவாறு த∴லீமுல் குர்ஆன் உடன் தொடர்புள்ள தங்களது பொறுப்புகளுக்கான உரிமையை செலுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டே செல்வானாக. ஆமீன்.

❖ இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் (தலைமையக நாஸிர் த∴வத்தே இலல்லாஹ்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு "ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை - சகிப்புத்தன்மை மற்றும் விரிவான தைரியம் ஆகியவற்றின் ஒளியில்" என்பதாகும்.

சொற்பொழிவின் ஆரம்பத்தில் நாஸிர் சாஹிப் அவர்கள் சூரா அஸ்ஸ∴ப்பின் 7 -வது வசனத்தை ஓதினார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த கவிதை வரிகளை கூறினார்கள்.

கவிதையின் பொருள்: ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு துஆக்கள் செய்யுங்கள். துக்கத்தைப் பெற்றுக் கொண்டு பிறருக்கு சுகத்தை வழங்குங்கள். ஆணவத்தின் நடைமுறையைக் காணும்போது நீங்கள் தாழ்மைக் குணத்தைக் காட்டுங்கள். ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு விட்டு இம்மக்களுக்காக நான் துஆ செய்கின்றேன். கருணையின் உணர்வின் காரணமாக நாங்கள் கோபத்தை தணித்து விட்டோம்.

மவ்லவி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சகிப்புத்தன்மை மற்றும் விரிவான தைரியம் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பல சம்பவங்களைக் கூறினார்கள்.

அதில் ஒரு சம்பவம் இவ்வாறு வருகின்றது: மிர்ஸா இமாமுத்தீன் மற்றும் நிஸாமுத்தின் ஆகியோர் 5 ஜனவரி 1900 -த்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் அவர்களது சஹாபாக்களுக்கும் துன்பமிழைத்து முபாரக் பள்ளிவாயிலுக்கு கீழேயிலிருந்து செல்லுகின்ற தெருவில் செங்கல் கற்களாலான சுவரைக் கட்டி வழிப்பாதையை அடைத்து விட்டனர். அதன் காரணமாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் மற்றும் விருந்தினர் -களுக்கு முபாரக் பள்ளிவாயிலுக்குச் செல்வதற்கு வேறு ஒரு வழியாக வர வேண்டியதிருந்தது. அந்த வழி மிகவும் சுற்றி வர வேண்டிய வழியாகவும் நடந்து வர முடியாத அளவிற்கு சம நிலையில் இல்லாத மோசமான வழியாகவும் இருந்தது. அந்த வழியில்தான் வர வேண்டியது இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில சஹாபாக்களை மிர்ஸா இமாதுத்தீனிடம் அனுப்பி வைத்தார்கள். இந்த வழியை அடைக்க வேண்டாம் என்று அவருக்கு மென்மையாக புரிய வையுங்கள் என்று அவர்களிடம் கூறி அனுப்பி இருந்தார்கள். இதனால் எனது விருந்தினர்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகின்றது என்றும் கூறி அனுப்பி இருந்தார்கள்.

நீங்கள் விரும்பினால் எனக்கு சொந்தமான வேறோர் இடத்தைப் பார்த்து அதை நீங்கள் உங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரலாம் என்ற வேண்டுகோளையும் அவரிடம் முன் வைக்குமாறு சஹாபாக்களிடம் கூறி அனுப்பி இருந்தார்கள். மிர்ஸா இமாதுத்தீன் இவற்றை கேட்டதுமே மிகவும் ஆத்திரமடைந்தவாறு அவர் (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ) சுயமே இங்கு ஏன் வரவில்லை? என்று கேட்டு விட்டு அவருக்கு வஹி வரத் தொடங்கியதில் இருந்து அவருக்கு என்ன ஆகி விட்டது? என்று தெரியவில்லை என்றவாறு மிகவும் இழிவாகப் பேசினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாவட்டத்தின் உயர் அதிகாரியான குர்தாஸ்பூரின் கமிஷனரிடத்தில் ஒரு குழுவை அனுப்பி வைத்து தனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அவரும் கூட மிகவும் எதிர்ப்பு காட்டும் வகையில் நடந்து கொண்டார். இந்த துன்பத்தை அகற்றுவதற்கான எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன என்பதை ஹுஸுர் (அலை) அவர்கள் உணர்ந்தார்கள். அப்போது அவர்கள் தன் தரப்பிலிருந்து குர்தாஸ்பூர் மாவட்ட நீதிபதியின் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். 12 ஆகஸ்டு 1901 -ல் இந்த வழக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு கூறப்பட்டது. மாவட்ட நீதிபதி அவர்கள் மிர்ஸா இமாதுத்தீன் வழக்கிற்கான அனைத்து செலவுகளையும் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் அதை தவிர அபராதமாக நூறு ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் தனது தீர்ப்பில் கூறியிருந்தார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழக்கறிஞர் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு இது பற்றி தகவல் கொடுக்காமலும் அவர்களிடமிருந்து ஆலோசனை பெறாமலும் தீர்ப்பில் கூறப்பட்டிருந்தபடி தொகையை செலுத்துமாறு கோரிக்கை வைத்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த சமயத்தில் குர்தாஸ்பூரில் இருந்தார்கள். அவர்கள் காதியானில் இல்லாத தருணத்தில் அரசாங்க ஊழியர்கள் காதியானுக்கு வந்தனர். மிர்ஸா இமாதுத்தீன் அவர்கள் இந்த நாட்களில் வ∴பாத்தாகி விட்டார்கள். மிர்ஸா நிஸாமுத்தீன் அவர்கள் உயிருடன் இருந்தார்கள். ஆனால் அவரது நிலைமை எப்படி இருந்தது என்றால் கேட்கப்பட்ட தொகையைக் கொடுக்க முடியாத நிலைமையில் அவர்கள் இருந்தார்கள். எனவே, அவர்கள் இந்த தொகையை மன்னித்து விடுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வேண்டினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இது பற்றிய தகவல் தெரிந்ததும் அவர்கள் எனக்கு இரவில் தூக்கம் வராது. இப்போதே சிலரை காதியானுக்கு அனுப்பி வையுங்கள். அவர்கள் அங்கு சென்று நாம் இந்த தொகையை அவர்களுக்காக மன்னித்து விட்டோம் என்று அவர்களிடம் கூற வேண்டும் என்று கூறினார்கள். அத்துடன் என்னிடம் தெரிவிக்காமலேயே எனது வழக்கறிஞர் உங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து விட்டார். அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் தன் தரப்பில் இருந்து காதியானுக்கு சென்றவர்களிடம் கூறி அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நிலைமையைப் பற்றி இவ்வாறு கூறுகின் -றார்கள்: நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன். ஒரு நபர் என்னை பார்த்து ஆயிரம் முறை தஜ்ஜால் என்றும், பெரும் பொய்யன் என்றும் கூறி இருந்தாலும் மேலும் என்னை எதிர்ப்பதற்காக எல்லா வகையிலும் முயற்சி செய்திருந்தாலும் அவர் என்னிடம் சமாதானம் செய்து கொள்ள விரும்பினால் பிறகு எனது உள்ளத்தில் அவர் என்னை பற்றி என்ன கூறினார்? என்னுடன் எவ்வாறு நடந்து கொண்டார்? என்ற எண்ணம் கூட எனக்கு வருவதில்லை. அவ்வாறு வரவும் முடியாது.

❖ இந்த அமர்வின் மூன்றாவது மற்றும் இறுதி சொற்பொழிவை "எச்சரிக்கை வடிவிலான மற்றும் நற்செய்திகள் அடங்கியுள்ள முன்னறிவிப்புகளின் ஒளியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மை" என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா சுல்தான் அஹ்மது ஸ∴பர் சாஹிப் (நாஸிம் இர்ஷாத் வக்∴பே ஜதீத் காதியான்) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தி -னார்கள். அவர்கள் சூரா அல் அன்ஆமின் 49 மற்றும் 50 -வது வசனங்களையும், சூரா ஜின்னின் 27 மற்றும் 28 -வது வசனங்களையும் தமது சொற்பொழிவின் ஆரம்பத்தில் ஓதினார்கள். அவற்றில் அல்லாஹ்விடமிருந்து வருகின்ற நபிமார்கள் மற்றும் தூதர்களுக்கு அவனிடம் இருந்து மறைவான செய்திகள் அதிகமாக வழங்கப்படுகின்றன. அவற்றில் நற்செய்திகள் அடங்கியுள்ள மற்றும் எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் இருக்கும். எந்த மக்கள் இந்த நபியின் மீது நம்பிக்கை கொண்டு தம்மை சீர்திருத்திக் கொள்கின்றனரோ அல்லாஹ் அவர்களது வாழ்க்கையிலிருந்து எல்லா வகையான

*குமரி மாவட்டத்தில்*
*இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்*
*பத்ர் வார இதழ் சம்பந்தமாக*
***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***
*1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)*
*இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.*
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

அச்சத்தையும் அகற்றி எல்லா துக்கத்திலிருந்தும் அவர்களுக்கு இரட்சிப்பை வழங்குகின்றான். மேலும் எவர்கள் இந்த நபியின் மீது நம்பிக்கை கொள்ளாமல் தீமைகளிலும் குழப்பங்களிலும் மூழ்கியுள்ளனரோ அவர்களுக்கு அல்லாஹ் தனது தண்டனையை சுவைக்கச் செய்கின்றான்.

மவ்லவி சாஹிப் அவர்கள் தமது சொற்பொழிவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன்னறிவித்திருந்த ஈமானை அதிகரிக்கச் செய்கின்ற பல நற்செய்திகள் அடங்கியுள்ள மற்றும் எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகளை எடுத்துக் கூறினார்கள்.

மேலும் இவ்வாறு கூறினார்கள்: இப்போது நான் நற்செய்திகள் அடங்கியுள்ள ஒரு முன்னறிவிப்பைப் பற்றி கூறுவேன். அந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்து இன்று வரை மிகவும் பொலிவுடன் நிறைவேறி வருகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் நற்செய்தி வழங்கியவாறு நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன் என்று கூறியிருந்தான். இது 1898 -ல் அவர்களுக்கு வந்த இல்ஹாமாகும். அப்போது அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரமாக இருந்தது. இந்த நிலைமைகளில் இது ஒரு மகத்தான முன்னறிவிப்பாக ஆகி விடுகின்றது. ஏனென்றால், இன்று இறைவனின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகின் 210 நாடுகளில் பரவியிருக்கின்றது. மேலும் ஜமாஅத்தின் எண்ணிக்கை ஆயிரங்களிலிருந்து வெளியேறி இலட்சங்களையும் தாண்டி கோடிகளை எட்டி விட்டது.

அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு ஏற்ப நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன் என்ற தனது வாக்குறுதிக்கு ஏற்ப ஜமாஅத்திற்கு தப்லீக் செய்வதற்கான பல வழிகளை வழங்கியுள்ளான். உதாரணமாக, இன்று அஹ்மதிய்யா கிலா∴பத்தின் நிழலின் கீழ் அஹ்மதிய்யத் உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பதற்கு உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான பிரச்சார நிலையங்கள் நிறுவப்பட்டு அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையை இதற்காக அர்ப்பணித்துள்ள ஆயிரக்கணக்கான பிரச்சாரகர்கள் பிரச்சாரப் பணிகளில் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். உலகின் பல நாடுகளில் பல்வேறு மொழிகளில் நூல்களை வெளியிடுவதற்காக புதிய தொழில் நுட்பங்களை கொண்ட அச்சகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை 75 மொழிகளில் திருக்குர்ஆனின் மொழியாக்கங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக Muslim Television Ahmadiyya International -ம் நிறுவப்பட்டிருக்கின்றது. அதன் மூன்று சேனல்கள் முழு உலகிலும் 24 மணி நேரமும் மக்களை தூய இஸ்லாத்தின் பக்கம் அழைத்துக் கொண்டிருக்கின்றது. அத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியும் தோன்றி விட்டார்கள் என்ற அறிவிப்பையும் அது தொடர்ந்து செய்து வருகின்றது.

❖ இந்த சொற்பொழிவிற்குப் பிறகு இரண்டு அரசியல் தலைவர்கள் சுருக்கமாக உரை நிகழ்த்தினர். கிர்கிஸ்தானைச் சார்ந்த ஓர் அஹ்மதி நண்பர் மிகவும் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய தமது தாக்கங்களை எடுத்துக் கூறினார்கள். அது பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

1) அவினஷ் ராய் கன்னா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) பாரதிய ஜனதா கட்சியின் துணைத்தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அவினாஷ் ராய் கண்ணா அவர்கள் தமது எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: நான் நற்பாக்கியம் பெற்றவனாக இருக்கின்றேன். அதாவது, எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆன்மீக கலீ∴பாவான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களை ஒருமுறை இலண்டனில் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுடன் அமர்ந்து தேநீர் அருந்துவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஹோஷ்யார்பூர் நகரத்துடன் அழமான தொடர்பு இருக்கின்றது. நான் அந்த நகரத்தைச் சார்ந்தவன் ஆவேன். ஹுஸூர் அவர்கள் இந்த நகரத்திற்கு வந்திருந்தார்கள். ஹுஸூர் அவர்களை அருகிலிருந்து பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்ததில் நான் பெருமை அடைகின்றேன். அப்போதும் நான் அவர்களை சந்தித்தேன். 2018 ஆம் ஆண்டு துவங்க இருக்கின்றது. நான் என் சார்பாகவும் எனது கட்சியின் சார்பாகவும் முழு இந்தியாவின் சார்பாகவும் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். எந்த அமைதி மற்றும் சாந்தியின் பிரச்சாரத்தை ஹுஸூர் அவர்கள் செய்து வருகின்றார்களோ அதற்கு 2018 ஆம் ஆண்டில் மேலும் வலிமையும் உறுதியும் கிடைக்க வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் துஆ செய்கின்றேன். மேலும் முழு உலகிலும் அமைதி நிலவட்டும். இந்த ஜமாஅத் 210 நாடுகளில் நிறுவப்பட்டு விட்டது. இந்த நாட்டை சார்ந்த மக்கள் எந்த நாட்டில் வசித்தாலும் அந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அங்கு அமைதி ஏற்படுவதற்காகவும் தமது பணிகளைச் செய்து வருகின்றனர். இதற்காகவும் நான் உங்கள் அனைவருக்கும் மிக அதிகமாக எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

2) சிக்பால் சிங் கேரா (மாநில சட்டசபையின் எதிர்க்கட்சி தலைவர்) இவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: இன்று நாம் அனைவரும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 123 -வது ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டிருக் -கின்றோம். ஜமாஅத் இவ்வளவு பெரிய மேடையில சகோதரத்துவம் அமைதி, சாந்தி ஆகியவற்றின் தூதுச் செய்தியை வழங்குகின்றது. எனக்கு இந்த மேடையில் நின்றவாறு சில சொற்களைக் கூறுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. பஞ்சாபின் பூமியில் ஜமாஅத்தின் தோற்றுனரான மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் அன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தியை பரப்பினார்கள். இலண்டனில் தற்போது இருந்து வருகின்ற ஜமாஅத்தின் கலீ∴பாவான மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கு நான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களது ஜமாஅத் உலகின் 210 நாடுகளில் பரவியுள்ளது. உலகில் சாந்தி மற்றும் அமைதியின் தூதுச் செய்தியைத் தருகின்றது. நாம் முதலில் மனிதர்களாக இருக்கின்றோம். அதற்குப் பிறகுதான் இந்துக்களாகவும் அல்லது சீக்கியர்களாகவும் அல்லது முஸ்லிம்களாகவும் இருக்கின்றோம். உலகின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து எந்த விருந்தினர் இந்த ஆண்டு மாநாட்டிற்கு வந்துள்ளனரோ நான் அவர்களை வரவேற்கின்றேன்.

3) கிர்கிஸ்தானைச் சார்ந்த ஆர்ஸர் அஸ் கேன் பாயூ சாஹிப் அவர்கள் தமது நாட்டு மொழியில் தமது தாக்கங்களை எடுத்துக் கூறினார்கள். அதன் மொழியாக்கத்தை உர்து மொழியில் தாஹிர் அஹ்மது தாரிக் சாஹிப் (தலைமையக துணை நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத்) அவர்கள் படித்துக் காட்டினார்கள். அவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: நான் எனது தரப்பிலிருந்தும் கிர்கிஸ்தான் ஜமாஅத் தரப்பிலிருந்தும் உங்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹு என்ற அன்பளிப்பை வழங்குகின்றேன். எனக்கு 2009 -ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இந்த எளியவனுக்கு அல்லாஹ் காலத்தின் இமாமையும் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பையும் வழங்கியுள்ளான். கடந்த ஏழு வருடங்களாக கிர்கிஸ்தான் ஜமாஅத் சகோதரர்கள் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு ஆண்டு மாநாட்டிலிருந்து பலன் பெற்று வருகின்றனர். காலத்தின் இமாமின் புனித ஊரான காதியானை வந்து பார்ப்பது என்பது ஈமான் மற்றும் உறுதியில் வலுவான நிலை உருவாகுவதற்கு காரணமாக ஆகியிருக்கின்றது. கிர்கிஸ்தான் 1991 வரை சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்தது. அதாவது இது ரஷ்ய பிரதேசங்களில் ஒரு பிரதேசமாகக் கருதப்பட்டு வந்தது. சோவியத் யூனியன் முடிவுற்ற பிறகு கிர்கிஸ்தான் ஒரு சுதந்திரமான நாடாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு அஹ்மதிய்யத்தின் துவக்கம் 1996 முதல் ஏற்பட்டது.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். [16:129]

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**

**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 15 February 2018 Issue No. 7

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

இந்த வருடத்தில் கிர்கிஸ்தானில் ஜமாஅத் நிறுவப்பட்டு 21 வருடங்கள் ஆகி விட்டன - அல்ஹம்துலில்லாஹ். பல தடைகள் இருந்தும் கூட ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்கின்றது. தப்லீகின் வழிகளில் தடைகள் இருக்கின்றன. ஆனால், அல்லாஹ் கனவுகள் மூலம் அங்கு மக்களுக்கு வழிகாட்டுகின்றான். தடைகள் இருந்தும்கூட அல்லாஹ் எவ்வாறெல்லாம் மக்களை உண்மையின் பக்கம் கொண்டு வருகின்றான் என்பதைப் பார்க்கும் போது அது எங்களது ஈமானின் வலிமைக்குக் காரணமாக ஆகி விடுகின்றது. 2015 ஆம் ஆண்டில் எங்களது ஓர் அஹ்மதி சகோதரரான மதிப்பிற்குரிய யூனுஸ் ஜான் சாஹிப் அவர்களின் ஷஹாதத் நிகழ்ந்தது. இவர்கள் தற்போதைய கிர்கிஸ்தானும் முன்னாள் சோவியத் யூனியன் அதாவது ரஷ்யாவின் மண்ணில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் வழியில் தனது இரத்தத்தை வழங்கிய முதல் அஹ்மதி ஷஹீது ஆவார்கள். இந்த எளியவன் இந்த அருளுக்குரிய ஊரில் ஆண்டு மாநாட்டில் இந்த அருக்குரிய சந்தர்ப்பத்தில் உங்கள் அனைவரிடமும் துஆவிற்காக வேண்டுகின்றேன். அதாவது ஷஹீது மர்ஹூமின் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் எண்ணற்ற நல்லியல்பு கொண்ட நற்பேறு பெற்ற ஆண் மக்களுக்கு அவர்கள் ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டு அதில் இணைவதற்கான காரணமாக ஆகுவதற்கும் அல்லாஹ் ஷஹீது மர்ஹூமின் தகுதிகளை உயர்த்திக் கொண்டே செல்வதற்கும் நீங்கள் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக. ஆமீன். அல்லாஹ் நம்மையும் நமது சந்ததிகளையும் ஈமானில் முன்னேறும் படி செய்வானாக. ஜஸாகுமுல்லாஹு அஹ்ஸனல் ஜஸா.

இதற்குப் பிறகு மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவை எட்டியது.

### (30 டிசம்பர் 2017 சனிக்கிழமை)

### இரண்டாவது நாளின் முதலாவது அமர்வு:

இரண்டாவது நாளின் முதல் அமர்விற்கு மதிப்பிற்குரிய செய்யது தன்வீர் அஹ்மது சாஹிப் (சதர் மஜ்லிஸ் அஞ்சுமன் வக்ஃபே ஜதீது காதியான் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது ஷம்சுத்தீன் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். மதிப்பிற்குரிய முர்ஷிது அஹ்மது டார் சாஹிப் அவர்களும் அவர்களது நண்பர்களும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கவிதையைக் கூட்டுப் பாடலாகப் பாடினார்.

❖ இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய சய்யிது ஆஃதாப் அஹ்மது நய்யர் சாஹிப் (காதியானிலுள்ள தலைமையக அஹ்மதிய்யா நூலகத்தின் பொறுப்பாளர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அன்னாரது சொற்பொழிவின் தலைப்பு "நபித்துவ வழியில் கிலாஃபத்தின் தோற்றமும் அதன் அருள்களும்" என்பதாகும். அவர்கள் அந்நூர் அதிகாரத்தின் 56 -வது வசனத்தை சொற்பொழிவின் ஆரம்பத்தில் ஓதினார்கள். பிறகு இவ்வாறு கூறினார்கள்: இது தொடர்ந்து இருந்து வருகின்ற அல்லாஹ்வின் நடைமுறையாக இருக்கின்றது. அதாவது மனிதயினத்திற்கு வாழ்வின் உண்மையான நோக்கத்தைப் பற்றி தெரிவிப்பதற்கு ஒவ்வொரு காலத்திலும் இறைவன் நபிமார்களை அனுப்புகின்றான். இந்த எல்லா நபிமார்களும் தூதர்களும் திருக்குர்ஆனின் اِنِّیْ جَاعِلٌ فِی الْاَرْضِ خَلِیْفَةً நிச்சயமாக பூமியில் தானே கலீஃபாவை ஏற்படுத்துகின்றேன் என்ற வசனத்திற்கு ஏற்ப இறைவனின் பிரதிநிதிகளாகவும் கலீஃபாக்களாகவும் உலகில் வந்து கொண்டிருந்தனர். இறைவனால் நியமிக்கப்பட்ட இவர்கள் நன்மை மற்றும் தக்வாவை அடிப்படையாக கொண்டுள்ள ஜமாஅத்திற்கான அடித்தளத்தை நிறுவி விட்டு அழிந்து போகின்ற இவ்வுலகிலிருந்து சென்று விடுகின்றனர். அதற்கு பிறகு உடனடியாக இறைவன் அவர்களது வருகையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக நபித்துவ வழியிலுள்ள கிலாஃபத்தை ஏற்படுத்துகின்றான். இதனை சுட்டிக் காட்டியவாறு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் مَا مِنْ نُبُوَّةٍ قَطُّ اِلَّا تَبِعَتْهَا خِلَافَةٌ அதாவது ஒவ்வொரு நபித்துவத்திற்கும் பிறகு அதை பின்பற்றி நடக்கின்ற கிலாஃபத் தொடர்கின்றது என்று கூறியுள்ளார்கள். (கன்ஸுல் உம்மால் தொகுதி 3, பக்கம் 119)

இது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்களின் இன்னொரு நபிமொழியும் இருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் நாடும் வரை உங்களில் இந்த நபித்துவம் நிலைத்திருக்கும். பிறகு அவன் அதை எடுத்து விடுவான். பிறகு இறைவன் நாடும் வரை நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைநாட்டப்படும். பிறகு இறைவன் அதையும் எடுத்து விடுவான். பிறகு அவனது நியதிக்கு ஏற்ப கொடுமையிழைக்கின்ற அரசாட்சி நிலைநாட்டப்படும். எதுவரையென்றால் அதற்குப் பிறகு அல்லாஹ்வின் கருணை பொங்கி எழும். அவன் அநீதியிழைக்கப்படுகின்ற இக்காலக் கட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவான். அதற்கு பிறகு மீண்டும் நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைநாட்டப்படும். இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நபித்துவ வழியிலுள்ள கிலாஃபத் நிலைநாட்டப்பட்டது. ஆனால், உண்மையான இஸ்லாமிய கிலாஃபத்திற்கு மக்கள் மதிப்பளிக்காமல் இருந்தபோது முஸ்லிம் சமுதாயத்திலிருந்து அல்லாஹ் இந்த மகத்தான அருளை எடுத்து விட்டான். இதற்கு பிறகு சடங்கு என்ற அளவில் இருந்து வந்த கிலாஃபத்தின் காலக்கட்டம் ஆரம்பமானது. இந்த சமயத்தில் சடங்கு என்ற அளவில் இருந்து வந்த இந்த கிலாஃபத் துருக்கி அரசாங்கம் மற்றும் உஸ்மானிய கிலாஃபத் என்று அழைக்கப்பட்டது. அதுவும் இறுதியில் முடிவுக்கு வந்தது. அதற்கு பிறகு இறைவனின் கருணை பொங்கி எழுந்தது. மேலும், இஸ்லாத்தின் மூழ்குகின்ற கப்பலை எதிர்ப்பின் புயல்களிலிருந்தும் எதிரிகளின் பிடியிலிருந்தும் காப்பாற்றுவதற்கும் இஸ்லாத்தின் மகத்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மீகப் புதல்வரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் மஹ்தியாகவும் அனுப்பி வைத்தான். அவர்களின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப நபித்துவ வழியிலான கிலாஃபத்தின் துவக்கம் மீண்டும் ஏற்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்ப நல்லவர்களின் ஜமாஅத் 27 மே 1908 -ல் ஸய்யிதுனா ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களின் கையில் ஒன்று சேர்ந்து விட்டது. இவ்வாறு இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றம் நிகழ்ந்தது. இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத் கிலாஃபத்தின் அருள்களில் இருந்து பயனடைந்தது. இஸ்லாத்தில் கிலாஃபத்தின் இந்த மகத்தான அருள் பற்றி அல்லாஹ் وَلَیُمَکِّنَنَّ لَھُمْ دِیْنَھُمْ "அவர்கள் விரும்பிய மார்க்கத்தில் அவர்களை நாம் உறுதியாக நிலைபெறச் செய்வோம்" என்று கூறுகின்றான்.

இன்றைய காலக்கட்டத்தில் முஸ்லிம்களின் எண்ணற்ற அமைப்புகளும், ஜமாஅத்துகளும் இன்றும் சொல்வதென்றால் உறுதியான அரசாங்கங்களும் கூட இருக்கின்றன. ஆனால், காலத்தின் சுழற்சியினால் ஏற்படுகின்ற நிலைமையை எதிர்த்து நிற்பதில் இவர்கள் அனைவருமே தோல்வியடைந்து விட்டனர். பல்வேறு பேரழிவுகளுக்கு அவர்கள் இரையாகிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு எதிரில் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூலமாக முழு உலகிலும் இஸ்லாம் பரவுவதையும் கல்வி மற்றும் தர்பிய்யத்தின் களங்களில் உலக அளவில் மகத்தான புரட்சி ஏற்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் பார்க்கின்றோம்.

*(தொடரும்....)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad